பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 09 செவ்வாய்க்கிழமை (24-11 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 362

# மாதகலிலிருந்து கடும் ஷெல் தாக்கு!
# சுழிபுரத்தில் பொதுமக்கள் ஐவர் பலி!!

## ஏழு பேர் படுகாயமுற்றனர்

யாழ்ப்பாணம், நவம்பர் 24

மாதகலில் நிலைகொண்டிருக்கும் ஸ்ரீலங்காப் படையினர் நேற்றுக்காலை திடீரென நடத்திய அகோர ஷெல் தாக்குதலில் சுழிபுரம் பகுதியில் ஐந்து பொதுமக்கள் உயிரிழந்தனர். ஏழு பேர் வரை படுகாயமடைந்தனர். சிறுவன் ஒருவன் காலை இழந்தான். பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் நாசமாகின.

நேற்றுக்காலை 6 மணியள வில் திடீரென ஆரம்பித்த ஷெல் தாக்குதல்கள் முற்பகல் பத்து மணி வரை விட்டுவிட்டு இடம்பெற்றன.

சுழிபுரம் மேற்கு குடாக் கரை, பாண்டவெட்டை, கல்வளையடி, மறாவாய், பனிப்புலம், வறுத்தோலை, இறாத்தலடி பகுதிகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்லுக்குப் பலியான ஐவர்

யாழ்ப்பாணம், நவ. 24

சுழிபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் உயிரிழந்த ஐந்து பேரின் விபரங்களும் வருமாறு:-

★ முருகன் தவத்துரை (வயது 38), சுழிபுரம் பாண்டவெட்டைப் பகுதியைச் சேர்ந்தவர். ஐந்து பிள்ளைகளின் தந்தை வீட்டில் இருந்தபோது ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

★ புவனன் ஆனந்தன் (வயது 40), சுழிபுரம் குடாக் கரையைச் சேர்ந்தவர். ஏழு பிள்ளைகளின் தந்தை வீட்டில் இருந்தபோது ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி இவரும், இவரது சகோதரியான அரியகுட்டி தவமணியும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

★ திருமதி அரியகுட்டி தவமணி (வயது 40) நான்கு பிள்ளைகளின் தாய்.

★ திருமதி வேலன் இராசரத்தினம் தவமணி (வயது 38); இவரும் சுழிபுரம் குடாக்கரையைச் சேர்ந்தவர்; மூன்று பிள்ளை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த ஏழு பேர்

நேற்று சுழிபுரத்தில் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமுற்ற ஏழு பேர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களின் விபரம் வருமாறு:-

★ சுந்தரர் ஞானசேகரம் (வயது 13)

★ பிள்ளையார் பிரதீபன் (வயது 10)

★ பொன்னாப்பபிள்ளை சிவநேசன் (வயது 22)

★ இராசரத்தினம் செல்வரத்தினம் (வயது 17)

★ ஐயன் ஆறுமுகம் தர்மரத்தினம் (வயது 26)

★ இராஜா சிவகுமார் (வயது 13)

★ சிவகுமாரின் தந்தை வேலன் இராஜா (வயது 45)

காயமடைந்த மற்றும் இலர் சங்கானை ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்றுச் சென்றனர்.

(உ-3-15-17)

## ஆயிரக்கணக்கானோர் சுழிபுரத்தில் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 24

நேற்று சுழிபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களை அடுத்து அப்பகுதியில் குடியிருந்த பல்லாயிரக் கணக்கானோர் அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

மாதகல் மற்றும் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து அகதிகளாகி, சுழிபுரம் பகுதியில் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்களே இவர்களில் அனேகர்.

படையினரின் ஷெல் குண்டுகள் சுழிபுரம் விக்ரோறியாக் கலூரியை அண்டிய பகுதியிலும் விழுந்து வெடித்தன. இதனால் அகதி முகாமில் தங்கியிருந்த மக்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கும் ஏனைய இடங்களுக்கும் அவசர அவசரமாக இடம்பெயர்ந்தனர்.

நேற்று சுழிபுரம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் சித்தன்கேணி, சங்கானை பகுதிகளில் உள்ள பொது இடங்களிலும் தொல்புரம் விக்கினேஸ்வரா கல்லூரி சித்தன்கேணி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, சித்தன்கேணி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனிலிருந்து வந்த அரிசி இறக்கப்படுகிறது

### பாவனைக்கு உகந்ததாம்

யாழ்ப்பாணம், நவ. 24

காங்கேசன்துறைக் களஞ்சியத்தில் பல மாதங்களாக இருப்பில் இருந்து நேற்றுப் பருத்தித்துறைக்குக் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட அரிசி மனித பாவனைக்கு உகந்ததென சுகாதாரப்பகுதியினரால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

''வெள்ளாக்'' கப்பலிலேயே வைத்து சுகாதாரப் பகுதியினர் அரிசியைப் பரிசோதனை செய்தனர். இந்த அரிசி காங்கேசன்துறையில் வைத்துச் சுகாதார முறைப்படி புகையூட்டப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்டிருந்தது

குறிப்பிட்ட அரிசி மனித பாவனைக்கு உதவாது எனக் காணப்படும் பட்சத்தில் கால்நடைத் தீவனம் செய்வதற்காகக் கொழும்புக்கு அனுப்பப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மழையின் மத்தியிலும் மாவீரருக்கு எழுச்சி குன்றாது மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் வாரத்தின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் குடாநாடெங்கும் பரவலாகச் சிறப்பாக நடைபெற்றன. மக்கள் தத்தம் பகுதிகளில் உள்ள மாவீரர் பந்தல்களுக்குச் சென்று மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு அஞ்சலி செலுத்தினர். மழையின் மத்தியிலும் எழுச்சி குன்றாமல் மக்கள் மாவீரர்களைக் கௌரவித்தனர்.

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அரசாங்க அலுவலகங்களில் மாவீரர் அஞ்சலி நிகழ்ச்சிகளும், நினைவுக் கூட்டங்களும் திட்டமிட்டபடி நடைபெற்றன.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் 82 அடி நீளமான நினைவுப் பந்தலில் 72 மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்துக்கு அரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ இரகசியங்கள் பாதுகாக்கப்படுவதில்லை

### சபையில் தினேஷ் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 24

பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் சம்பந்தமான யுத்த இரகசியங்கள் பாதுகாக்கப்படுவதில்லை.

— இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் குற்றம் சுமத்தினார் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் கொழும்பு மாவட்ட எம். பியுமான தினேஷ் குணவர்த்தனா:

புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகள் பத்திரிகையாளர்களுக்குப் பகிரங்கப் படுத்தப்படுகின்றன.

வடக்கு-கிழக்கு இணைப்பை சுதந்திரக் கட்சி விரும்புகிறதா? இல்லையா? — இதனை அக்கட்சி பகிரங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிமாவின் சம்பள அதிகரிப்பு பாதுகாப்பு நிதிக்கு!

கொழும்பு, நவ. 24

தமக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பை பாதுகாப்பு நிதிக்கு வழங்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார். (உ)

## புலிகளைப் புகழ்கிறார் காமினி பொன்சேகா!

கொழும்பு, நவ. 24

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஸ்ரீலங்கா உப சபாநாயகர் காமினி பொன்சேகா விடுதலைப் புலிகளுக்குப் புகழாரம் சூட்டினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் புலிகளைப் புகழ்ந்தார்.

தியாகம், யுத்தம் செய்யும் முறை, துணிச்சல் இவற்றை விடுதலைப் புலிகளிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த ஜே வி பியினர் ஒரு சவனைப் பிள்ளையைக் கூட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் மீதான இனப்படுகொலை:

# ஸ்ரீலங்கா அரசை விசாரணை செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்!

### இந்திய மக்களுக்கான உலக அமைப்பு ஐ.நாவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 24

தமிழர் மீது இனப்படு கொலை நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசையும், அதன் அதிகாரிகளையும், முகவர்களையும் விசாரணை செய்ய சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை நியமிக்க வேண்டும்.

— இவ்வாறு கோரும் முறைப்பாடு ஒன்றை இந்திய மக்களுக்கான உலக அமைப்பு ஐ நா. சபையிடம் அண்மையில் சமர்ப்பித்திருக்கிறது

இந்திய மக்களுக்கான உலக அமைப்பு (கோபியோ), சர்வதேச இந்திய சமூக நண்பர்கள் அமைப்பு, இந்திய-அமெரிக்க கழகங்களின் தேசிய சம்மேளனம் ஆகியவை இணைந்து இந்த மகஜரை ஐ. நா. சபையிடம் சமர்ப்பித்திருக்கின்றன

மகஜர் ஐ. நா. சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட செய்தி ஏற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணிபம் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

தமிழீழத்தின் வடபகுதியில் வாணிபம் மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையில் பதிவு செய்து கொள்ளும்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டிருந்த காலம் 30-11-92 வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இதுவரை பதிவு செய்யாதவர்களை இவ்வாய்ப்பைப் பயன்படுத்திப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்வதுடன், பதிவு செய்யாத எந்தவொரு வாணிபமும், தொழில் முயற்சியும் தொடர்ந்தியங்க இசைவளிக்கப்பட மாட்டாது என்பதையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

இதற்குரிய படிவங்கள் 24-11-92 முதல் 30-11-92 வரை [27-11-92 தவிர] காலை 9-00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ் மாவட்ட வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் மட்டுமே வழங்கப்படும் என்பதையும், முன்போல் தென்மராட்சி, வடமராட்சி உப-செயலகங்களில் வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகிறோம்.

தனியார் கல்வி நிறுவனங்களும் 30-11-92 இற்கு முன் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

## வாணிபம் தொழில் முயற்சி தொடர்பான விளக்கம்

1) வாணிபம்:

வாணிபம் என்பது கொள்வனவு, விற்பனையில் ஈடுபட்டுள்ள நிரந்தர வாணிபர்களை மட்டுமல்லாது நடமாடும் வாணிபர்கள், தரகர்கள், முகவர்களையும் உள்ளடக்கும்.

2) தொழில் முயற்சி:

தொழில்முயற்சி என்பது உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள உற்பத்திச் சாலைகள், உயர் தொழில்/கண்ணியத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை மட்டுமல்லாது அத்தொழிலில் ஈடுபட்டுள்ள தனி ஆட்களையும், போக்குவரத்துச் சேவை, பிரயாணச் சேவை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோரையும் உள்ளடக்கும்.

செ. தமிழேந்தி
(நிதிப் பொறுப்பாளர்)
தமிழீழ விடுதலைப் புலிகள்

(இ/3892)

# மகேஸ்வர இல்லம், நவாலி

[அநாதைப் பிள்ளைகளுக்கு]

## புதிய சிறுவரைச் சேர்த்தல்

1. 6 வயதுக்கும் 12 வயதுக்கும் உட்பட்ட ஆண் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு பூர்த்தி செய்யப் பெற்ற விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.
   இறுதித் திகதி: 03 — 12 — 1992
2. விண்ணப்பப் படிவங்கள் இல்லத்தில் கிடைக்கும்.
3. முன்பு விண்ணப்பித்தவர்களும் மீளப் புதுப்பித்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் யாவரும் கிரவருடன் நேர்முகச் சந்திப்புக்கு 06-12-1992 ஞாயிறு காலை 10-00 மணிக்கு இல்லத்தில் சமுகம் தரல் வேண்டும்.

- தர்மகர்த்தா சபை.

'மகேஸ்வர இல்லம்',
நவாலி, மானிப்பாய்.

(5591)

# புதிய பிரிவு

## CHEMISTRY - திரு. மகாதேவா

சனி / ஞாயிறு } 1-00 — 2-30

ஆரம்பம்: 05 - 12 - 1992

(நடைபெறுகின்ற இரு பிரிவுகளிலும் அனுமதி கிடைக்காத மாணவர்கள் நலன் கருதி இப் பிரிவு ஆரம்பமாகவுள்ளது)

★ சனி 28 – 11 – 1992 அல்லது ஞாயிறு (29 – 11 – 1992) பிற்பகல் 1-00 — 3-00 மணிவரை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

விவரங்களுக்கு:

பதிவாளர்,

**BOND INSTITUTES**

58 ஏ, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(இ 3890)

# நாளை

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகம் நடாத்தவிருக்கும் கருத்தரங்குத் தொடரின் முதலாவது கருத்தரங்கு "எமது வானிலை" என்ற தலைப்பில் நாளை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும்.

யாழ். பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில் புவியியற்றுறைத் தலைவர் திரு பாலச்சந்திரன் கருத்துரை வழங்குவார். (உ)

# இலங்கை வெற்றி

மாத்தறை, உயன்வத்தை மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி நியுசிலாந்து அணியை 17 ஓட்டங்களால் தோற்கடித்தது.

இலங்கை அணி 45 ஓவர்களில் 7 விக்கட்டுகள் இழப்புக்கு 181 ஓட்டங்களை எடுத்தது.

பதிலளித்தாடிய நியுசிலாந்து அணியால் 45 ஓவர்களில் 7 விக்கட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

இவ்விரண்டு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று மாத்தறை, உயன்வத்தையில் இடம்பெறும்.

# மினிபஸ் விபத்தில் மாணவன் பலி

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி — தட்டாதெருச் சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற மினிபஸ் விபத்தில் மாணவர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமது சைக்கிளை எடுக்கச் சென்றவரை யாழை விலகிய மினிபஸ் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பலாலி புனித செபஸ்தியார் ஆலயப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சுன்னாகத்தில் வசித்து வந்த யோகேஸ்வரநாயகம் சுரேஸ்குமார் (வயது 20) என்பவரே மரணமானவராவார்.

இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி உயர்தர வகுப்பு 2 ஆம் ஆண்டு மாணவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-15-51]

## ஆயிரக்கணக்..,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிள்ளையார் கோவில், சித்தங்கேணி சிவன் கோவில், வழக்கம்பரை அம்மன் கோவில் ஆகியவற்றிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் ஷெல் தாக்குதல் சற்றுத் தணிந்திருந்ததை அடுத்து, காலையில் இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் சுழிபுரம் பகுதிக்குத் திரும்பியதாகத் தெரிய வந்தது.

[உ-3-5-12-17-28-145-162]

## ஷெல்லுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களின் தாயார். வீட்டிலிருந்தபோது ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவத்தில் இவரது கணவரான வேலன் இராசவும், மகள் இராசா சிவகுமாரும் படுகாயமடைந்தனர்.

★ பண்டாரி தியாகராஜா (வயது 40). இவர் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்தவர். வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது ஷெல்லினால் தாக்குண்டு வயிற்றில் படுகாயமடைந்தார். பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

உயிரிழந்த நான்கு பேரின் சடலங்கள் நேற்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்த பின்னர் சுழிபுரம் நெல்லியானில் தகனம் செய்யப்பட்டன.

[உ-3-5 12-15-17-28-68-143-162]

# பரீட்சை ஒத்திவைப்பு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் நேற்றுத் தொடங்கவிருந்த ஆண்டு இறுதிப் பரீட்சைகளை தவிர்க்க முடியாத காரணத்தால் நடத்த முடியவில்லை என பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆண்டு 3, 4, 5 வகுப்புகளுக்கான பரீட்சைகள் நவம்பர் 30 மற்றும் டிசம்பர் முதலாம் திகதிகளிலும் — ஆண்டு 6, 7, 8 வகுப்புகளுக்கான பரீட்சைகள் நவம்பர் 30 ஆம் திகதி தொடக்கமும் — ஆண்டு 9, 10 வகுப்புகளுக்கான பரீட்சைகள் டிசம்பர் 18 ஆம் திகதி தொடக்கமும் — நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகளுக்கான புதிய நேர அட்டவணை, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# சிறிமாவின் உத்தரவுக்கு நீதிமன்று இடைக்கால தடை

கொழும்பு, நவ. 24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் பதவியில் இருந்தும் மத்திய குழு உறுப்பினர் பதவியில் இருந்தும் கே. ஆர். சூரியப்பெருமாளை நீக்கி, கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்த உத்தரவுக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கிறது.

சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளரான சூரியப்பெருமாள் தமக்கு எதிராக கட்சித் தலைவி விதித்த உத்தரவை ஆட்சேபித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அந்த வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி சரத் குணதிலக சூரியப்பெருமாளை நீக்கும் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தார்.

இந்த இடைக்காலத் தடை 6 ஆம் பக்கம் பார்க்க]

# சோபியா லோறனுக்கு ஐ. நா. தூதுவர் பதவி!

வாஷிங்டன், நவ. 24

யுத்தம் மற்றும் பஞ்சம் காரணமாக ஆபிரிக்காவில் அகதிமக்கள் அடையும் இன்னல்கள் குறித்து உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக பிரபல நடிகை சோபியா லோறனை ஐக்கிய நாடுகள் சபை நல்லெண்ணத் தூதராக நியமித்து உள்ளது.

நடிகை லோறன் அண்மையில் யுத்தம் மற்றும் பஞ்சம் காரணமாக சீரழிந்த நிலையில் உள்ள சோமாலிய நாட்டுக்குச் சென்றார். அங்கு பட்டினி காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் பதாக் பகுதிக்கு அவர் விஜயம் செய்தார். பட்டினியால் அப்பகுதியில் தினமும் சராசரி 50 பேர் மரணமடைந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நூற்றாண்டிலேயே யுத்தம், பஞ்சம், பட்டினி ஆகியவற்றால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதியாக பதாக் கணிக்கப்பட்டு உள்ளது. (உ-எ)

## யாருடையது?

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்த பகுதியில் தாம் கண்டெடுத்த துவிச்சக்கரவண்டி ஒன்றை, நல்லூரைச் சேர்ந்த திரு. எஸ். வேதாரணியம் உதவி பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

அந்தச் சைக்கிளைத் தவறவிட்டவர்கள் உரிய அடையாளங்கள், இட விவரங்களைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (உ)

# யாழ். றோட்டரிக் கழகம்

## யாழ்ப்பாண றோட்டரி புலமைப் பரிசில்

யாழ். பல்கலைக் கழகத்தில் பயிலும் மகாபொல மாணவர் உதவிப் பணம் கிடைக்காத கலைப்பீட, விஞ்ஞானபீட மாணவர்களிடமிருந்து யாழ். றோட்டரிக் கழகத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்கள் யாழ். பல்கலைக் கழகத்தினால் கோரப்படுகின்றன. அனாதைகள், அகதிகளானோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் பத்திரங்கள் யாழ். பல்கலைக் கழகத்தின் கல்விக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 25 - 11 - 1992 க்கு முன் யாழ். பல்கலைக் கழகத்தின் கல்விக்கிளைச் சிரேஷ்ட உதவிப்பதிவாளருக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

தலைவர்,
யாழ். றோட்டரிக் கழகம்.

(23351)

# சாவகச்சேரி நகரசபை

## வரவு செலவுத் திட்டம் 1993

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட 1993 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் 30-11-92 ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாட்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 23-11-92.

(இ/3891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு தடவை இடம்பெறும்

# திருமலை-யாழ். தீவக கப்பல் சேவை

## நேற்று ஆரம்பமாக இருந்ததாம்

கொழும்பு, நவ 24

திருகோணமலையில்இருந்து யாழ். குடாநாட்டின் தீவுப் பகுதிக்கு வாரம் ஒரு தடவை பயணிகள் கப்பல் சேவை நடத்தப்படவுள்ளது என்றும் — முதல் கப்பல் சேவை நேற்று (திங்கள்) ஆரம்பமாக இருந்தது என்றும் — கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

திங்கள் தீவுப்பகுதி நோக்கிச் செல்லும் இக்கப்பலை இன்று செவ்வாய்க்கிழமை அங்கிருந்து புறப்படும் என்றும் — அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

"நியூகோராம்" என்ற பெயரிலான சிங்கப்பூர் கப்பலே இச்சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது என்றும் —

மான்ய அடிப்படையிலேயே பயணக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் — இது ஒரு ஆளுக்கு 100 ரூபாவாகும் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வோர் காரைநகர், கோவளம், புங்குடுதீவு மற்றும் ஊர்காவற்றுறையில் இறங்கலாமாம்.

பயணிகள் திருகோணமலைத் துறைமுகத்தில் பயணச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் — சொந்தத் தேவைகளுக்கான பொருள்கள் அடங்கிய பொதிகளை மட்டுமே பயணிகள் எடுத்துச் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

### விதை கிழங்கும் வருகிறது

இன்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமண' கப்பலில் ஹோலந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 100 மெற்றிக் தொன் சிறந்த ரக உருளைக்கிழங்கும் எடுத்து வரப்படுகிறது.

விதை உருளைக்கிழங்குக்காக முற்பணம் செலுத்தியோரும் பதிவுசெய்தவர்களும் பணத்தைக்கட்டி திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. கா. குணரத்தினம் தெரிவித்தார். (இ)

### விநியோகம்

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக விவசாயிகளுக்கு மண்வெட்டிகளை வழங்கி வருகின்றது.

கிராமிய உற்பத்திக் குழு வட்ட இணைப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு மண்வெட்டிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

---

**மாவீரர் வார சிந்தனை**



★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன் ஏனெனில் இந்த மண் என்னைப் பிறப்பித்தது. நான் நேசிக்கும் எனது மக்களைப் பிறப்பித்தது."

★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்தமண் என்னை வாழவைக்கிறது, எனது வாழ்விடமாய்த் திகழ்கிறது."

★ "இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் எனக்கு சுவையான உணவைத் தந்து என் பசியைத் தீர்த்து வைக்கிறது."

"இந்த மண்ணை நான் முத்தமிட விரும்புகின்றேன். ஏனெனில் இந்த மண் சுத்தமான காற்றை எனக்கு சுவாசிக்கத் தருகிறது."

— தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.

---

## போலிப் பாஸ்போர்ட்:

# மூன்று இலங்கைத் தமிழர்கள் புதுடில்லியில் கைதாகினர்

போலிப்பாஸ்போர்ட்டுகளுடன் விமானப் பயணம் செய்ய முயற்சித்ததாகக் கூறப்படும் இலங்கைத் தமிழர் மூவரை புதுடில்லிப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இம் மூவரும் மாற்றுப் பெயர்களுடன் விமான மூலம் அக்ரோட்டாமை அடைந்த போது அங்கு குடியகல்வு — குடிவரவு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

இவர்கள் சனிக்கிழமை புதுடில்லி வந்தடைந்தனர். புதுடில்லிப் பொலீஸார் உடனே அவர்களைக் கைது செய்தனர்.

யோகச்சந்திரன் (வயது 64) அவரது மனைவி சந்திராணி, அவர்களது மருமகள் பவானி ஆகியோர் தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பயண முகவர் இம்மூவர்களின் உண்மையான பாஸ்போர்ட்டுக்களை வாங்கி வைத்துக் கொண்டு போலிப் பயணச் சீட்டுக்கள், போலிப் பாஸ்போர்ட்டுகள் ஆகிய வற்றை ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு அவர்களிடம் வழங்கியதாக விசாரணையில் தெரியவந்தது. (உ-எ)

## கிம்பிரிகஸ்ஸாய சம்பவம்;

# துப்பாக்கிச் சூடு நடத்திய ஒருவர் இனங்காணப்பட்டார்

கொழும்பு, நவ. 24

கொழும்பு-கிம்பிரிகஸ்ஸாய பகுதியில் ஜனாதிபதியின் செயலாளரின் மெய்ப் பாதுகாவலர்களில் ஒருவரைச் சுட்டுக் காயப்படுத்திவிட்டு தப்பி ஓடியதாகக் கூறப்படும் இரண்டு தமிழ் இளைஞர்களில் ஒருவரை தாம் இனங்கண்டு விட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

யோகன் என்றழைக்கப்படும் இவர் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவர் என்றும் அவரது வயது 19 என்றும் பொலீஸார் கூறினார்.

இந்த இரண்டு இளைஞர்களை தேடிக் கண்டு பிடிப்பதில் எட்டு சிறு பொலீஸ் குழுக்கள் இராணுவ உதவியுடன் ஈடுபட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

இச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனக் கூறப்படும் 19 வயது தமிழ் யுவதியும் அவரது பெற்றோர்களும் கிரிபத்பனையில் வைத்து இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனராம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-எ)

---

**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

## பழைய மாணவர் ஒன்றுகூடல்

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ள பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள விரும்பும் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் 1992-12-05 ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலக நேரத்தில் கல்லூரி அதிபரிடம் தமது பெயர்களைப் பதிவுசெய்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சி. அருளானந்தம்
செயலாளர்

க. சந்திரசேகரா
தலைவர்

(கி/3884)

---

**தென்னங்கன்றுகள் உடன் விநியோகம்**

தென்னங்கன்றுகள் தேவையானோரும், பதிவு செய்தவர்களும், அவ்வப்பகுதி கமநலசேவை நிலையங்களிலும், நல்லூர் கமநலசேவை நிலையம், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயத்திலும் 25-11-92 (புதன்கிழமை) உடன் பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

ஜெ. சத்தியேந்திரன்,
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,
நல்லூர். (23369)

---

உ

விராட் விஸ்வப்பிரம்மனே நம!

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருடம் கார்த்திகைத் திங்கள் 10ஆம் நாள் (25-11-1992) புதன்கிழமை பகல் 10மணி முதல் 11மணி வரையுள்ள ★ சுபமுகூர்த்த வேளையில், ★

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**பரமேஸ்வரன்**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**ஜெயந்தி**
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு பருத்தித்துறை குருமணல் முருகன் ஆலயத்தில் திருமணவிழா இனிது நடைபெறும். அத்தருணம் தாங்களும், தங்கள் குடும்ப சமேதராகய் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் ★ அன்புடன் அழைக்கின்றோம். ★

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 25-11-1992 அன்று பிற்பகல் 4 மணிக்கும் 7 மணிக்குமிடையில் நடைபெறும்.

○ தலைப்பாகை அணிதல் காலை 6-30 — 7-00 வரை ○

இம்மனம் தங்கள் நல்வரவை நாடும்!

திரு. திருமதி பொன்னுத்துரை,
இல. 21, கன்னார ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி அம்பிகைபாலன்,
சங்குவத்தை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(இருவீட்டார் அழைப்பு)

(5575)

---

முதலாவது

## பிறந்த தின வாழ்த்து



## ★ செல்வன் கபிலன் ★

புங்குடுதீவு, 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சச்சிதானந்தன் - கிரேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கபிலன் தனது முதலாவது பிறந்ததினத்தை யாழ்ப்பாணத்தில் இன்று (24 - 11 - 92) வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, நயினாதீவு அப்பம்மா, சித்தப்பாமார், மாமிமார், மாமாமார், அப்பப்பா, அம்மம்மா, ஆசைமாமா, சித்திமார் பிரான்ஸ் மாமாமார், மாமிமார், பிரான்ஸ் சித்தி, சுவீஸ் சித்தப்பா, சித்தி, தங்கை - சுகிர்தா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் அருள் பெற்று, பல்கலையும் பெற்றுப் பார்போற்ற வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (23342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பிறிமா பிறவுன் + கறுப்பு பேட்டுக் குஞ்சுகளும், கோழிகளுக்கான மருந்துகளும் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5588)

வேப்ப மரப் பலகையில் செய்யப்பட்ட உடுப்பு அலமாரி, யப்பான் ஏசியா ¾ சைக்கிள், றோணியோ இயந்திரம் முதலியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு 65 (185), பிரதான வீதி, யாழ்ப்பாணம். (5592)

## கலண்டர் விற்பனைக்கு

1993ஆம் ஆண்டிற்கான மெய்கண்டான், லீலா, அஷ்டலஷ்மி கலண்டர்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-3785)

## உரம் தேவையா?

எம்மிடம் நான்கு வருடகால பாவனையில் உள்ள கோழி எரு விற்பனைக்கு உண்டு. தொடர்பு V.K.M. Farm, இல. 12, கனகசபை லேன், கே. கே. எஸ். வீதி, (யாழ். இந்துக்கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம். (23361)

## தவறிவிட்டது

19 - 11 - 1992 காலை சிவப்பிரகாசம் வீதிக்கும், மனோகராச் சந்திக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். கா. நித்தியானந்தன். 234, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம். (5590)

## O/L Dec. 1992

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், சித்திரம், நடனம், சங்கீதம், விவசாயம், மனைப்பொருளியல் பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். வீட்டில் வைத்து விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond - Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இ/3883)

## மினிபஸ் சேவை

சாவகச்சேரி, நவ. 24

சாவகச்சேரிக்கும் சுன்னாகத்திற்கும் இடையிலான புதிய மினிபஸ் சேவை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்வயல், மட்டுவிலுக்கூடாக இந்த சேவை இடம்பெறுகின்றது. (த-81)

## நான்காவது தொலைக்காட்சி சேவை

டெல்ஷான் தொலைக்காட்சிச் சேவை எதிர்வரும் டிசம்பரில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது இலங்கையின் நான்காவது தொலைக்காட்சிச் சேவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-எ)


## அடையாள அட்டைப் படம்

தேசிய அடையாள அட்டைப் படம் பிடிக்க ரூபா 40/-. விரைவாக வழங்கப்படும்!

★ குகன் ★
ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.
(இ-3879)


# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18 — 06 — 1930

உதிர்வு: 05 — 12 — 1991

## அமரர் வே. கணேசபிள்ளை

(முன்னாள் அரசாங்க ஒப்பந்தகாரர்)

நதியொன்று வற்றிப் போனது
வாழ்க்கை நந்தவனம்
வரண்டு போய்விட்டதே
அப்பா!
உங்கள் கிளையில் பூத்த புஷ்பங்களை
கண்ணீர் மழையில்
நனைய விட்டுப் போனதென்ன?
கானல் தான் வாழ்க்கையென்று
காட்டி நீங்கள் சென்ற பாதையென்ன?
பாலைவனத்திலே
ஒரு துளி நீருக்கு ஏங்குவது போல்
அப்பா!
உங்கள் அன்புப் பார்வைக்கு ஏங்குகின்றோமா,
நீங்கள் வரமாட்டீர்களா?
புன்னகை பொதிந்த முகம்
போனவழி தெரியவில்லை
தென்றலைத் தந்த பொதிகை
சென்ற இடம் தெரியவில்லை
அப்பா!
நீங்கள் திரும்பிவர மாட்டீர்களா?
வரவே மாட்டீர்களா?
இனி...... எம்மிடம்
வரவே மாட்டீர்களா?

ஆத்மா சாந்திபெற வேண்டும்;

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

172/3, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம். [23837]

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கதிரவேலு சுப்பிரமணியம்

(ஸ்தாபகர் - இராசம் மோட்டர் ஸ்ரோர்ஸ்)

தோற்றம்: 15 — 01 — 1927

மறைவு: 01 — 12 — 1986

திதி: 24 — 11 — 1992

எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து, அன்பு செலுத்திய உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள், மருமக்கள்.

12, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [23338]

# பண்டித பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அண்மையில் நடத்திய பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 53 பேர் இந்தப் பரீட்சையில் தோற்றியிருந்தனர்.

நுணாவிலைச் சேர்ந்த கந்தையா தர்மராசா முதல் நிலைத்தேர்வான பிரவேச பண்டித பரீட்சையில் முதற் பிரிவில் சித்தியடைந்துள்ளார். ஜ. பங்கஜவதனி, சி. ஆனந்தினி த. கௌரி ஆகியோர் இரண்டாம் பிரிவிலும் வேறு 19 பேர் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றுள்ளனர். இறுதித்தேர்வான பண்டித பரீட்சைக்குத் தோற்றியிருந்தவரில் எவருமே சித்தியடையவில்லை. (த-5)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

# அறிவித்தல்

அங்கத்தவர்கள் பலரின் வேண்டுகோளின்படி கோட்ட நிர்வாகிகள் பதவிக்கான வேட்புமனுதாக்கல் இறுதித் திகதி 30-11-92 என நீடிக்கப்பட்டுள்ளது.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

[23365]

# 31ஆம் நாள் நினைவு



மலர்வு: 13 — 03 — 1924

உதிர்வு: 26 — 10 — 1992

## திருமதி மாரிமுத்து நாகம்மா


தாயும் நீ! தந்தையும் நீ என எமை வளர்த்த அன்புத் தெய்வமே! உன் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டி இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிலேகியார் கோவிலருகாமை,
சங்கானை. [5589]

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 02 — 10 — 1905

விண்ணில்: 06 — 12 — 1991

## அமரர் முத்தர் இரத்தினம்

(உரிமையாளர்: இராசகுமாரி ட்ரான்ஸ்போட் சேர்விஸ், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)

திதி: 24-11-1992

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் விளைநிலமாய்- வாழ்ந்திட்ட
எம் அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று சென்றாலும் நீங்காது
உம் நினைவு எம் நெஞ்சைவிட்டு!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

83/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [23350]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## நோய்க்குரிய மருந்து தெரியாதா?

கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோ குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொலையுண்டதைத் தொடர்ந்து தலைநகர் கொழும்பில் மட்டுமன்றி தென்னிலங்கை முழுவதிலுமே விழிப்புடன் இருக்க வேண்டிய தேவை அரச பாதுகாப்பு இயந்திரத்துக்கு ஏற்பட்டுள்ளது.

அதனால், வெடிகுண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு அரசாங்கமும், பாதுகாப்புப் பகுதியினரும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வது இயல்பே.

இதற்கு முன்னரும் கொழும்பில் இரண்டு பாரிய குண்டு வெடிப்புகள் நடந்த வேளைகளிலும் இதே தீவிரமும் சுறுசுறுப்பும் காணப்பட்டது. ஆனால் இப்போது மீண்டும் குண்டு வெடித்திருக்கிறது.

இதன் அர்த்தம் என்ன?

அரசாங்கத்தின், பாதுகாப்பு அதிகாரிகளின் தடுப்புத் திட்டங்கள் தோல்வி கண்டுவிட்டன. தனது உயிரைத் துச்சமென மதித்து குண்டுத் தாக்குதலை நடத்த நினைக்கும் ஒருவன் அதனை நடத்தியே தீருவான். எனவே அவசரகாலச் சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றுவது, வீட்டுச் சொந்தக்காரர் வெளியாரைத் தங்க அனுமதிக்கக்கூடாது என்று தடை விதிப்பது போன்றவற்றால் குண்டு வெடிப்புகளைத் தடுக்க முடியாது!

வைத்தியன் ஒருவன் நோய் நாடி, நோயின் குணம் நாடித்தான் சிகிச்சை செய்யவேண்டும் நோய் ஒன்றாக இருக்க சிகிச்சை அதற்கு நேர்மாறாக அமையுமானால் நோயாளி குணமடைவதற்குப் பதிலாக மரணிப்பது நிச்சயம்.

வடக்கு - கிழக்கில் போர் நடப்பதற்கு மூல காரணம் என்ன? அந்தப் போர் மற்றொரு வடிவத்தில் தென்னிலங்கைக்குள் உட்செல்வது ஏன்?

இனப்பிரச்சினை கடந்த ஐந்து தசாப்தங்களாகத் தீர்வு எதுவுமின்றி நீண்டு செல்கிறது. தென்னிலங்கை அரசியல்வாதிகளால் இழுத்தடிக்கப்படுகிறது. தீர்க்க தரிசனத்துடன் அதனைத் தீர்த்து வைத்திருந்தால் உள்நாட்டில் இத்தனை பெரிய போரும், அளவிட்டுச் சொல்ல முடியாத அழிவுகளும் நிகழ்ந்திருக்கமாட்டா.

தமிழர்களை அடக்கி ஆள்வதில் யார் வல்லவர்கள் என்று தெற்கில் அரசியல்வாதிகள் போட்டி போட்டார்கள். தமிழர்களும் மனிதர்கள். அவர்களும் இந்த நாட்டின் சமத்துவமுள்ள பிரஜைகள் என்பதை அங்கீகரிக்க மறுத்தார்கள். அந்த வினைவால் விளைந்த அறுவடையே இன்றைய வடக்கு - கிழக்குப் போரும் மற்றும் கொழும்பில் குண்டு வெடிப்பது போன்ற நிகழ்வுகளும்.

இன்றைய அவலங்களையும், அவஸ்தைகளையும், அழிவுகளையும் போக்குவதற்குரிய சிகிச்சை இனப்பிரச்சினைக்கான நீதியான நியாயமான தீர்வேயாகும். அந்தச் சிகிச்சைக்குரிய மருந்தை கையிலும் எடுத்துப் பார்க்காமல் எவ்வாறு நோயைக் குணமாக்குவது?

போருக்குரிய ஏற்பாடுகளைச் செய்வதிலும், அதற்குத் தேவையான ஆளணியினரைத் திரட்டுவதிலும், போரை நீடிப்பதிலும், அதனை எப்படி வெல்லலாம் என்று திட்டமிடுவதிலும், குண்டு வெடிப்புகளைத் தடுப்பதற்கான வழிகளை வகுப்பதில் தலையைப் பிசைவதிலும் செலவிடும் நேரத்தை, சக்தியை, வளங்களை இனப்பிரச்சினைக்குரிய தீர்வைக் காண்பதற்குச் செலவிட்டால் நாட்டைக் காப்பாற்ற முடியும். இந்தக் கட்டத்திலேனும் தென்னிலங்கைத் தலைவர்கள் இதனை உணர்வார்களா?

# மண்மீட்பு போரில் வீரவேங்கை ஒருவர்
# கேட்பது ஆறு அடி நிலத்தை மட்டுமே

(நேற்றைய தொடர்ச்சி)

இது ஒருபுறமிருக்க, எமது சக தோழர்கள்,

இவரது வீர மரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதைப் பாதிக்கின்றன. அதாவது பெற்றோரோ, உடன்பிறந்தவர்களோ, உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச் சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழநின்று இறுதிச் சடங்குகளை நடத்தினாலும்கூட அப் போராளியை பெற்றெடுத்து - சீராட்டி வளர்த்த தாய் - தந்தையரோ அல்லது உடன் பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகிறது.

போராட்ட நிலைமை காரணமாக அவர்கள் வரமுடியாது விட்டாலும் நாளை அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் அவர்களுக்கு எதைக் காட்டப் போகின்றோம்?

ஒன்றன்பின் ஒன்றாய் நூற்றுக்கணக்கான போராளிகளைத் தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப் போகின்றோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும், அங்கலாய்ப்பையும் அனுபவவாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான் தனது பிள்ளையின் உடலைப் பார்க்காது விட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையைப் பார்த்து ஓரளவு ஆறுதல் அடைபவராவது நாங்கள் உதவி செய்வோம். அத்துடன் அடிக்கடி அக் கல்லறைக்குச் சென்று அவனது நினைவுகளை மீட்டுப் பார்ப்பதுடன் ஓர் ஆத்ம திருப்தியையும் அவர்கள் அடைந்து கொள்வார்கள்.

## மாவீரர் மாண்பு மடல்

### நிம்மதி ஏற்படும்

கல்லறைகளை அமைத்து அடிக்கடி அங்கே செல்வது சோகத்தை தொடர்ந்தும் மனங்களில் வைத்திருப்பதற்காகவா? என ஒரு கேள்வி எழலாம்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானது தான். அந்தச் சோகத்தை மறக்க வேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்க முடியாது தானே!

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப் பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா? என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம் தொட்டு இருந்து வரும் தகனம் செய்வது தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழர் பண்பாட்டில், இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புறநானூறு இலக்கியமும் ஈமத்தாழி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்கப் போதுமானவை.

ஆனாலும் இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும்.

உண்மையில் இந்த முறையை ஒரு சமூக சீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொதுமக்களுக்கல்ல. எனவே இங்கே பண்பாட்டுப் பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன் புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக் கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

### இராணுவம் அழிக்காதா?

சரி அப்படிப் புதைத்து எழுப்பப்பட்ட கல்லறைகளை இராணுவம் அழிக்காதா? அப்படி நடந்தால் வீரமரணமடைந்த போராளிகள் அவமதிக்கப்பட்டது போலாகாதா? எனவே இந்த அவமதிப்புக்கு புலிகளே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாமா? எனவும் கேள்வி எழலாம்.

தியாகி சிவகுமாரனுக்கு உரும்பராயில் அமைக்கப்பட்ட சிலையையும், மன்னார் தளபதி லெப். கேணல் விக்டரது கல்லறையையும் சிங்களப் படைகள் சிதைத்ததையும் மனதில் வைத்து மேற்குறித்த கேள்விகள் எழுவது நியாயமானதே.

போரில் கொல்லப்பட்ட எதிரி இராணுவ வீரனது கல்லறைக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பது சாதாரண போர் தர்மம். ஆனால் அதை சிங்கள இராணுவம் கடைப்பிடிக்கும் என உறுதி கூறமுடியாது தான்.

ஆக்கிரமிப்பு இராணுவமாக இங்கு செயற்பட்டு அதனால் கொல்லப்பட்ட இந்திய ஜவான்களுக்காக இந்திய அரசு எமது மண்ணிலேயே அமைத்த நினைவுச் சின்னங்களை இந்தியப் படைகள் வெளியேற்றப்பட்ட பின்பும் கூட நாம் உடைத்தெறியவில்லை என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

ஆனால் எமது மண்ணில் எமது போராளிகளுக்கு எமது மக்கள் அமைத்த நினைவுத் தூண்களையும், கல்லறைகளையும் சிங்கள இராணுவம் உடைத்தெறிவதையிட்டு நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. வேண்டுமானால் அதையிட்டு சிங்கள இனம் வெட்கப்படட்டும்.

இறுதியாக ஒன்று சொல்கின்றோம். முழுமையாகவே எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது தாய்மண்ணை விடுவிக்கும் போரில் வீரமரணமடையும் ஒரு வீரவேங்கை கேட்பது ஆறு அடி நிலத்தை மட்டுமே.

(முற்றும்)

## மாவீரர் வார இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களால் நடத்தப்படும் கூட்டுறவு வட்ட மாவீரர் தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை கோப்பாய், உடுவில், யாழ்ப்பாணம் ஆகிய வட்டங்களில் நடத்தப்படும்.

யாழ்ப்பாணம் வட்டத்துக்கான விழா கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். விழாவுக்கு யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு. சூ. சிறில் தலைமை வகிப்பார். கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பிற்பகல் 2.00 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

உடுவில் வட்டத்துக்கான விழா இன்று பிற்பகல் 4-00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியிலும் —

கோப்பாய் வட்டத்துக்கான விழா இன்று பிற்பகல் 2-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் — நடைபெறும். (இ-17)

★ ★ ★

யாழ். கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினால் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் மாவீரர் தின நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந் நிகழ்வுகளில் மாவீரர் பற்றிய உரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

★ ★ ★

வட்டுக்கோட்டை, நவ. 24

வட்டு. திருஞான சம்பந்த வித்தியாசாலையில் இன்று செவ்வாய் மாலை 3-00 மணிக்கு மாவீரர் விழா நடைபெற உள்ளது.

பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வே. மகேசவேலு தியாகச்சுடரை ஏற்றிவைப்பார். விழாவுக்கு திரு. வி. சிவஞானசோதி தலைமை வகிப்பார். (இ)

★ ★ ★

மாவீரர் வாரத்தையொட்டி நாவற்குழி, அரியாலை [illegible] இடங்களிலுள்ள [illegible] பெயர்ந்த முகாம்களைச் சேர்ந்தோர் வேலணை பிரதேச செயலர் இ. இளங்கோவன் தலைமையில் இன்று 24 ஆம் திகதியும், நாளை மறுதினம் 26 ஆம் திகதியும் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இச் சிரமதானப் பணியில் ஊர்காவற்றுறை - வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்களும், கிராம சேவையாளர்களும், யாழ். செயலக ஊழியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-100)

★ ★ ★

மட்டுவில் வடக்கு வர்த்தகர்கள் நடத்தும் மாவீரர் தின விழா இன்று மாலை 5 மணிக்கு மட்டுவில் கன்றிந்தலைச்சி அம்மன் கோவிலடியில் நடைபெறும். பாடசாலை மாணவர்களுக்கான இயல், இசை, நாடகப் போட்டிகளும் இடம்பெறும்.

★ ★ ★

சரசாலை மட்டுவில் பகுதிகளைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் வைபவம் இன்று நடைபெறும். மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் இரவு ஏழு மணிக்கு ஆரம்பமாகும் இவ் வைபவம் சரசாலை - மட்டுவில் பொறுப்பாளர் திரு. அன்பு தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

வாதரவத்தை அக்காச்சி கிராம மைதானத்தில் இன்று மாவீரர் விழா நடைபெறுகிறது. பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவுக்கு திரு. சிறிக்குமார் தலைமை வகிப்பார். பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஆகியோர் கருத்துரைகளும், எழுச்சி உரைகளும் நிகழ்த்துவர்.

★ ★ ★

கோப்பாய் வட்டத்தைச் சேர்ந்த புத்தூர் மாவீரர் மண்டபத்தில் இரவு 7-30 [illegible]

(அ-இ-17-162)

## மாணவர் இலவச சீருடை; டிசம்பரில் அனுப்பப்படும்

வடக்கு-கிழக்கு மாணவர்களுக்கான இலவச சீருடைகள் எதிர்வரும் டிசம்பர் இறுதிவாரத்துக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உள்ள மாணவருக்கான சீருடைகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்றும் —

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குரிய சீருடைகள் லொறி மூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து முல்லைத்தீவுக்கு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க மூலமும் —

கிளிநொச்சிக்கு ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் மூலமும் அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (த-எ)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு:
## முஸ்லிம் எம். பிக்கள் கொழும்பில் ஆராய்வு

வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து முஸ்லிம் எம். பிக்கள் அண்மையில் கொழும்பில் கூடி ஆராய்ந்தனர்.

ஐ. தே. க., சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், சுயேச்சைக் குழு ஆகியவற்றைச் சேர்ந்த முஸ்லிம் எம். பிக்களே அமைச்சர் ஹமீத் தலைமையில் கூடி ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு — கிழக்குக்கு தனித் தனியான மாகாண சபைகள்; சமஷ்டி அரசமைப்பு முறை— என்ற யோசனையை பிரதான அரசியல் கட்சிகளும் சிங்களவர்களும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் தாமும் அதனை வரவேற்பது என்று முஸ்லிம் எம். பிக்கள் முடிவு செய்தனர்.

கொழும்பு தமிழ் வார இதழ்கள் இச்செய்தியை வெளியிட்டன. (உ-எ)

## மாவீரர் நினைவு இதழ்

"வெளிச்சம்" கார்த்திகை மாத இதழ் மாவீரர் நினைவு வெளியீடாக இன்று வெளிவருகிறது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் மாவீரர்கள் பற்றிய உணர்ச்சி பூர்வமான கருத்துக்களும் அடங்கியுள்ளன. (வ)

## மாவீரர் நாள் - 1992

**மாவீரர்களே!**

காவியமான மாவீரர்கள் எங்கே? - உன்
கண்களில் அல்லவோ ஆடுகிறார் இங்கே
ஆயிரம் தடவைகள் பாடை வராது - களம்
ஆடவா! வந்தால் தோல்வி இராது.

- தமிழீழ மாவீரர் பணியகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

